Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 283

திங்கட்கிழமை
05 செப்ரெம்பர் 2022

ஆவணி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## கொத்துரொட்டி விலை அதிகரிப்பு

கொழும்பு, செப். 5
கொத்து ரொட்டியின் விலை 100 ரூபாவாலும் ரொட்டி மற்றும் ரோல்ஸ் ஆகியவற்றின் விலைகள் 10 முதல் 15 ரூபாவாலும் அதிகரிக்கப் 11 ➤

# கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு தனி வழி!

## சிறீதரன் எம்.பி. கோரிக்கை



**யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 5**

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிடவேண்டும். அடுத்த தேர்தல்களில் பங்காளிக்கட்சிகளுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட்டாலும், அந்தத் தொகுதிகளில் தமிழ் அரசுக் கட்சி சுயேச்சையாக வேட்பாளர்களைக் களமிறக்கி, பங்காளிக்கட்சிகளை தோற்கடிக்கவேண்டும் -என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.** 11 ➤

## ஐ.எம்.எப். உடன்பாடு மிகுந்த மகிழ்ச்சி

### அதன் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 5
இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு ஒத்துழைப்பு வழங்க சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எப்.) மற்றும் இலங்கைக்கு இடையில் பணியாளர் மட்ட உடன் 11 ➤

## படிப்பது தேவாரம் இடிப்பது சிவன்கோயில்

### ரெலோ - ரணில் சந்திப்பை இப்படி விமர்சிக்கிறார் ஸ்ரீகாந்தா

யாழ்ப்பாணம், செப். 5
ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு இலங்கை விவகாரத்தை பாதுகாப்புச் சபைக்குப் பாரப்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தும் கடிதத்தில் ரெலோ கையெழுத்திட்டு விட்டு, ஜனாதிபதி ரணில் விக்கிரம 11 ➤

## புதிய கூட்டணியின் பணி அழுத்தக் குழுவாக இருப்பதே!

### ஆரம்ப நிகழ்வில் கம்மன்பில பேச்சு

கொழும்பு, செப். 5
உலகம் முழுவதும் கையேந்துவதே கொள்கைத் திட்டமாக உள்ளது. நாட்டை மீட்பதற்கான திட்டம் ஆளுங்கட்சியிடமோ அல்லது எதிர்க்கட்சியிடமோ இல்லை. அதனால்தான் புதிய கூட்டணியை 11 ➤

## குடும்ப ஆட்சி வேண்டாமாம்

### விமலுக்கு வந்த சுடலைஞானம்

கொழும்பு, செப். 5
குடும்ப ஆட்சியின் பின்னால் அணி திரண்டது போதும். பாரம்பரிய அரசியல் கலாசாரம் முடிவுக்கு வரட்டும். புதியதொரு அரசியல் கலாசாரத்தை ஏற்படுத்தி நாட்டை மீட்கவே 'மேலவை இலங்கைக் 11 ➤



"அப்ப பழையபடி கூட்டமைப்புக்குள்ள குழப்பங்கள் தொடங்குது போல"

## தகுதியானவர்கள் வடக்கில் இருக்க பணிப்பாளராக சிங்களவர் ஏன்?

### நியமனத்தை மறுபரிசீலனை செய்ய கோருகின்றார் விக்னேஸ்வரன் எம்.பி.

யாழ்ப்பாணம், செப். 5
வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளராக மருத்துவர் திலிப் லியனகே நியமிக்கப்பட்டதை மீள் பரிசீலனை செய்யுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். வடக்கு மாகாண சுகாதார 11 ➤

### கேணியாவால்

## 2 மாதக் குழந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 5
கேணியா காரணமாக 2 மாத ஆண் குழந்தையொன்று உயிரிழந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. 11 ➤

## கோத்தா வீடு சென்றுவிட்டார் இன்னும் ஏன் கொக்கரிப்பு?

### இப்படிக் கேட்கிறார் அமைச்சர் பிரசன்ன



கொழும்பு, செப். 5
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாடு திரும்பியமைக்கு எதிராக எவரும் குரல் எழுப்ப முடியாது. அவரைக் கைது செய்யுமாறும் எவரும் அழுத்தம் கொடுக்கவும் முடியாது - இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கோத்தாபய ராஜபக்சவை ஜனாதிபதி பதவியிலிருந்து விலகி, வீடு செல்லுமாறே ஆர்ப்பாட்டக்காரர்கள் அன்று கோரினர். அவரை நாட்டைவிட்டு வெளியேறுமாறோ 11 ➤

## கார் - மோ. சைக்கிள் சிறுப்பிட்டியில் விபத்து

### ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 5
யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் சிறுப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில், மோட்டார்சைக்கிள் சென்ற மூவர் பலத்த காயங்களுக்குள்ளான 11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை விவகாரம்

# பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் உள்ளடக்கம் தீர்மானத்தில் தேவை

## ஐ.நா.விடம் வலியுறுத்து

**கொழும்பு, செப்.5**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்கா தொடர்பாகக் கொண்டு வரப்படவுள்ள தீர்மானத்தில் பொறுப்புக்கூறலுக்கான விடயங்கள் மறைக்கப்படாமலும், மறக்கப்படாமலும் இருப்பதற்கான உள்ளடக்கங்கள் இடம்பெறவேண்டும் - இவ்வாறு சிறிலங்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சிறிலங்கா தொடர்பாக இறுதியாகக் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட 46.1 தீர்மானத்தின் காலம் நிறைவடையவுள்ளது. தற்போது புதிய பிரேரணையொன்று பிரித்தானியா தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் கொண்டுவரப்படவுள்ளது.

இந்தப் பிரேரணையில், இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நீக்கப்படவேண்டும். பொறுப்புக்கூறல் செயற்பாடுகள் மறைக்கப்படாமலும் மறக்கப்படாமலும் இருப்பதற்காக முக்கியமான விடயங்களை உள்ளீர்க்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

சாட்சியங்களை திரட்டுவதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ள நிலையில் அந்தப் பொறிமுறை அடுத்த பிரேரணையிலும் உள்ளடக்கப்படுவதோடு, அதற்கான அங்கத்தவர்கள் முழுமைப்படுத்தப்பட்டு செயற்பாட்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன், இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான நிலைவரங்கள் பற்றிய கண்காணிப்பு தொடரப்பட்டு பேரவைக்கு அறிக்கையிடப்படவேண்டும்.

இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் தொடர்பாகக் காண்காணிப்பதற்காக விசேட அறிக்கையிடலாளர் ஒருவரையும் நியமிக்கமுடியும்.

மியான்மரில் இடம்பெற்ற விடயங்கள் சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு அமைக்கப்பட்ட விசேட நிபுணர்கள் அடங்கிய விசேட விசாரணைப் பொறிமுறையொன்றையும் உருவாக்க முடியும்- என்றார். (எ-இ)



## மத்திய வங்கிக்கு முன்னாள் ஆளுநரை நியமிப்பதற்குச் சதி!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 5

திருமணத்துக்குச் செல்வதாகக்கூறி நாட்டைவிட்டு தப்பிச் சென்ற மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரை மீண்டும் அழைத்து வருவதற்காக தற்போதைய மத்திய வங்கி ஆளுநருக்கு எதிரான சதி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவா? என்று கேள்வி எழுப்பியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிலர் தற்போதைய மத்திய வங்கி ஆளுநரின் குடியுரிமை குறித்து கேள்வி எழுப்புகின்றனர். வரலாற்றில் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்களை மத்திய வங்கியின் ஆளுநராக நியமித்தது யார்? என்பது நாட்டுக்கே தெரியும்.

மத்திய வங்கி ஆளுநருக்கு எதிரான சதித்திட்டத்தின் அடுத்த கட்டமாக நாட்டைவிட்டுத் தப்பிச் சென்ற முன்னாள் மத்திய வங்கி ஆளுநரை அழைத்து வந்து மத்திய வங்கியைக் கையளிப்பதா என்ற சந்தேகம் எமக்கு உள்ளது. அதுமட்டுமின்றி, எவ்வளவோ தொகை வேண்டுமானாலும் பணம் அச்சடித்தாலும் பணவீக்கம் உயராது என்று தன்னிச்சையாகச் செயற்பட்ட மத்திய வங்கி ஆளுநர் ஒருவர் இந்நாட்டில் இருந்ததை நாம் மறந்துவிடக்கூடாது - என்றார். (ம)

## நாட்டிலிருந்து வெளியேறும் மருத்துவர்கள் அதிகரிப்பு

கொழும்பு. செப்.5

சிறிலங்காவில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டில் இருந்து வெளியேறும் மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

இதுதொடர்பில் அந்தச் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் ருவன் ஜயசிறி தெரிவித்துள்ளதாவது:

இந்த ஆண்டு இறுதிக்குள் குறித்த எண்ணிக்கை ஆயிரமாக அதிகரிக்கக்கூடும். தற்போது நாட்டிலிருந்து மருத்துவர்கள் வெளியேறுகின்றனர் என்று கூறப்படுகிறது.

மருத்துவ சபையின் ஊடாக வெளிநாடு செல்வதற்கான அனுமதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. 2 ஆயிரத்து 200 அனுமதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

விசேட மருத்துவராக ஒருவர் பதிவு செய்வதற்கு முன்னர் வெளிநாட்டு பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்பதால் அவர்களில் அதிகமானோர் கற்றல் செயற்பாடுகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்கின்றனர்- என்றார். (எ-இ)



## சீன உர விவகாரம்

### ஷசீந்திர ராஜபக்சவே முழுப் பொறுப்பானவர்

கொழும்பு, செப்.5

சீனாவிலிருந்து உரத்தை இறக்குமதி செய்து நாட்டுக்கு 69 லட்சம் டொலர் நட்டத்தை ஏற்படுத்தியமைக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஷசீந்திர ராஜபக்சவே பொறுப்பு- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு நட்டத்தை ஏற்படுத்தியவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பது அரசின் பொறுப்பு. ஆனால் அச்சம் காரணமாக மேற்குறித்த அமைச்சருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ய-இ)

# கறுப்பு பட்டியலில் சீன உரநிறுவனம்!

## கணக்காளர் நாயகம் பரிந்துரை

கொழும்பு, செப். 5

சீனாவின் கிங்டாவோ சீவின் பயோடெக் நிறுவனத்தை கறுப்புப் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் அரசாங்கத்துக்குப் பரிந்துரைத்துள்ளது.

சேதன உரம் கொடுக்கல் - வாங்கல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயற்படாததன் காரணமாக இந்தப் பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது என்று கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

96 ஆயிரம் மெற்றிக் தொன் சேதன உரங்கள் கொள்முதல் தொடர்பான விசேட கணக்காய்வு அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சீனாவின் உர வழங்குநரான, கிங்டாவோ சீவின் பயோடெக் நிறுவனம், கடந்த 2021 செப்ரெம்பர் 23ஆம் திகதியன்று, 20 ஆயிரத்து 550 மெற்றிக்தொன் உரத்தை கொழும்பு துறைமுகத்துக்கு அனுப்பியது. தாவர தனிமைப்படுத்தல் சட்டத்தின்படி நுண்ணுயிரி நீக்கம் செய்யப்படாததால் அதை சிறிலங்காவில் தரையிறக்க முடியாது போனது. அதையடுத்துப் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. உரத்தை இறக்குமதி செய்த இரண்டு அரச நிறுவனங்க ளான இலங்கை உரக் கம்பனி மற்றும் கொமர்ஷல் உரக் கம்பனி என்பன பணம் வழங்க மறுத்ததோடு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து கொடுப்பனவை நிறுத்துவதற்கான உத்தரவைப் பெற்றன.

இது இராஜதந்திர முறுகலை ஏற்படுத்தியிருந்த நிலையில், சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் இணக்கப்பாட்டின் மூலம் தீர்வுகாண, அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கமைய, கப்பலில் உள்ள உரத்தில் 75 வீத இருப்புக்கான கட்டணமாக 6.9 மில்லியன் அமெரிக்க டொலர் (சுமார் ஆயிரத்து 382 மில்லியன் ரூபா) செலுத்தப்பட்டது. தேவையான கலவை மற்றும் தரம் கொண்ட உரங்களை அதே நிபந்தனைகளின்படி மீண்டும் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தொடர்புடைய வழக்கு மீளப் பெறப்பட்டது. ஆயினும் எதிர்பார்த்த தரமான உரங்களை வழங்குவதற்கு அந்நிறுவனத்தால் [illegible] விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி, நாணயக் கடிதம் மற்றும் உத்தரவாதப் பிணை என்பவற்றின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டு செல்லுபடியாகும் நிலையில் வைத்திருக்க வேண்டும். எனினும், அவை முறையே கடந்த மார்ச் 12 மற்றும் மார்ச் 24ஆகிய திகதிகளில் காலாவதியாகிவிட்டன. அதனால் மீண்டும் தரப்படுத்தப்பட்ட உரத்தை சம்பந்தப்பட்ட நிறுவனம் வழங்கவில்லை. அதற்காகச் செலுத்தப்பட்ட பணத்தை மீளப்பெறும் திறனை சிறிலங்கா இழந்துள்ளது. உரத்துக்காக செலுத்திய தொகை முழுவதும் அரசுக்கு நட்டமாக மாறியுள்ளது.

அது தொடர்பான பத்திரங்களை காலாவதியாகும் முன் பணமாக்குதல் அல்லது அவற்றின் காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுக்காமை மற்றும் முற்பண செலுத்தலின்போது எந்தவித பாதுகாப்பும் இன்றி நிதியை விடுவிக்காதமை ஆகியவற்றின் காரணமாக அரசுக்கு ஏற்பட்ட நட்டத்தை, இந்தக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பொறுப்புக்கூறவேண்டியவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து வசூலிக்க வேண்டும் என்றும் கணக்காய்வாளர் நாயகம் பரிந்துரைந்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்தியாவை இலக்குவைத்து தமிழ் மக்களை வதைக்காதீர்

## சீனத்தூதுவருக்கு சரவணபவன் காட்டம்

**யாழ்ப்பாணம், ஒக. 5**

**ஈழத் தமிழர்களுக்கு உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, உபத்திரவம் கொடுக்காமல் சீனா ஒதுங்கியிருக்கலாம். அதை விடுத்து மேற்கு நாடுகளுடனும், இந்தியாவுடனும் முரண்படுவதாக நினைத்துக் கொண்டு தமிழ் மக்களை வதைக்கும் வகையில் நடந்துகொள்கிறது. கடன் வாங்கிய சிங்கள தேசத்துடன் - சிறிலங்கா அரசாங்கத்துடன் மாத்திரம் தனது நாட்டாண்மையை சீனா மட்டுப்படுத்திக் கொண்டால் நன்று.**



இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில், இலங்கைக்கான சீனத் தூதுவர் அண்மையில் வெளியிட்டுள்ள சர்ச்சைக்குரிய கருத்துக்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மனித உரிமை விவகாரங்களை முகமூடியாக பாவித்து சில நாடுகள் இலங்கை விவகாரத்தில் தலையிடுகின்றன என்று சீனத் தூதுவர் குற்றஞ்சுமத்துகின்றார். இது சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்ற கதையைப்போல் உள்ளது. கடன்பொறியால் ஒரு நாட்டைக் சுவீகரம் செய்யும் சீனா, இதுபோன்று குற்றஞ் சுமத்துவதற்கு எந்த அருகதையும் அற்றது. இலங்கைக்கு சீன உளவுக்கப்பல் வந்து சென்றிருந்தாலும் அந்த விடயத்தில் சீனா சில பின்னடைவுகளைச் சந்தித்திருப்பதால், இந்தியா மற்றும் மேற்கு நாடுகள் மீது சீறிப் பாய்திருந்தது. இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு ஆபத்பாந்தவர்களாக இந்தத் தரப்புக்களே இப்போது இருப்பதால், அவர்களைச் சீண்டுவது என்பது ஒருவகையில் தமிழ்மக்களைச் சீண்டுவதற்கு சமதையானதே.

இதுவரை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சிறிலங்கா அரசாங்கத்துக்கு முட்டுக் கொடுத்துவருவது சீனா. பாதிக்கப்பட்ட தமிழ் தரப்புக்கள் சில சந்தர்ப்பங்களில் இந்த விடயங்களில் உதவிகோரியபோது, ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுவது தமது கொள்கையல்ல என்று சீனா பலமுறை சொல்லியிருக்கின்றது. ஆனால், சிறிலங்கா அரசாங்கத்துக்கு தனது கொள்கையை மீறி பல தடவைகள் உதவியிருக்கின்றது. இன்னமும் உதவிக் கொண்டிருக்கின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில், மனித உரிமை விவகாரம் அவசியம்தானா என்று சீனத் தூதுவர் கேள்வி எழுப்பியிருந்தார். மனித உரிமைகள் தொடர்பில் பேசுவதற்கு தகுதியற்றவர்கள் அவர்கள். ஆனாலும், இப்போது மனித உரிமை விவகாரம் அவசியமா என்று கேள்வி எழுப்பும் தூதுவர், தமிழ் மக்களின் நீதிக்கான பயணம் இன்னமும் முடிவுறாமல் இருப்பதற்கு தாங்களும் ஒரு காரணம் என்பதை ஒப்புக்கொள்ளவேண்டும்.

இலங்கையைக் கட்டுப்படுத்தி இந்தியாவுக்கு குடைச்சல் கொடுப்பதற்காக, சிறிலங்கா அரசாங்கத்துக்கு கண்மூடித்தனமாக ஆதரவை சீனா வழங்கி வந்து கொண்டிருக்கின்றது. அதன் விளைவுகளே இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி. தங்களால் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகளைச் சாட்டாக முன்வைத்து, தமிழ் மக்களின் விடயங்களை நீர்த்துப்போகச் செய்யும் நிகழ்ச்சி நிரலை முன்னெடுக்கும் சீனாவை ஒதுக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் தமிழர் தாயகத்தில் தலையெடுத்தும் பார்த்திராத சீனா, இப்போது மெல்ல மெல்ல, தமிழர்களுக்கு கைகொடுக்கும் இந்தியாவுக்கு குடைச்சல் கொடுப்பதற்காக, தமிழ் மக்களுக்கு உதவுகின்றோம் என்ற போர்வையில் நுழைய முயல்கின்றது. ஆனால் அவர்களின் உண்மை முகம் சீனத்தூதுவரின் கருத்தின் ஊடாக அம்பலப்பட்டிருக்கின்றது. எனவே எத்தகைய முகமூடியுடனும் எமது தேசத்தில் கால் பதிக்க சீனாவை அனுமதிக்கக்கூடாது, அனுமதிக்கவும் முடியாது- என்றுள்ளது - (ம)

# ரணில் அரசாங்கத்தின் ஆயுள் ஆறு மாதங்களே

## வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 5

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இந்த அரசாங்கத்தை அதிகபட்சமாக ஆறு மாதங்கள் வரையே கொண்டுசெல்ல முடியும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

பொரளையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீண்டும் அரசியலுக்கு வருவது பொருத்தமானதல்ல. முன்னாள் ஜனாதிபதியை நிம்மதியாக ஓய்வெடுக்க அனைவரும் ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# புற்றுநோய்த் தடுப்பூசிகளுக்கு நாடு முழுவதும் தட்டுப்பாடு

## நோயாளிகள் கடும் சிரமம்



கொழும்பு, செப்.5

மார்பகப் புற்றுநோயாளிகளுக்கு வழங்கப்படும் தடுப்பூசி (tabzumab) உட்பட புற்றுநோயாளிகளுக்கு பயன்படுத்தப்படும் கிட்டத்தட்ட 20 வகையான மருந்துகள் கிடைக்காததால், தொடர் சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும், நோயாளிகள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மற்றும் கண்டி தேசிய மருத்துவமனைகள், கராப்பிட்டி மற்றும் யாழ்ப்பாணம் பொது மருத்துவமனைகள் மற்றும் மஹரகம மருத்துவமனை உட்பட பல மருத்துவமனைகளில் இந்தத் தடுப்பூசி உட்பட மருந்துகள் இல்லை என சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆயிரம் மார்பகப் புற்றுநோய் தடுப்பூசிகளை பெறுவதற்கு கொள்வனவு அனுமதி வழங்கப்பட்ட போதிலும் சுமார் 500 தடுப்பூசிகளே பெறப்பட்டு மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகின்றன என்று மருத்துவமனைகளின் பணிப்பாளர்கள் சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளனர்.

புற்றுநோயாளர்களுக்கு தொடர்ச்சியாக சிகிச்சை அளிக்க வேண்டியுள்ள போதிலும், இந்த மருந்துகள் இல்லாததால் நோயாளர் பராமரிப்பு சேவைகள் முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# கோத்தாபய ராஜபக்சவை கைதுசெய்யவேண்டும்!

## வலியுறுத்துகின்றார் மரிக்கார்

கொழும்பு, செப்.5

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் முன்னெடுக்கப்பட்ட தூரநோக்கற்ற தீர்மானங்கள் காரணமாகவே நாடு வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. மக்களை உணவுக்காகப் போராடும் நிலைக்குத் தள்ளிய கோத்தாபய ராஜபக்ச உடனடியாகக் கைது செய்யப்படவேண்டும்- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது: நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளிய கோத்தாபய ராஜபக்ச நாட்டுக்கு வந்தவுடன் சலுகைகளும், விசேட பாதுகாப்பு வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் கோத்தாபய ராஜபக்ச மேற்கொண்ட தீர்மானங்களாலேயே நாட்டு மக்கள் இருவேளை உணவு உண்ணும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டு மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிக்கான பொறுப்பை கோத்தாபய ராஜபக்ச ஏற்கவேண்டும். கோத்தாபய ராஜபக்சவை உடனடியாகக் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து உரிய தண்டனை பெற்றுக்கொடுக்கவேண்டும் - என்றார். (எ-இ)



பொதுஜன பெரமுனவின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவின் வீட்டு திருமண நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-இ)

# குளிர்காலத்தில் கொரோனா வேகமெடுக்கும்

## மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, செப். 5

நிலவிவரும் குளிரான காலநிலை காரணமாக மீண்டும் தலைதூக்கியுள்ள கொரோனாப் பெருந்தொற்றுப் பரவுகை ஆபத்தை விளைவிக்கும் என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் கொழும்பு விஞ்ஞான பிரிவின் பிரதானி மருத்துவர் சமித கினிகே மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் கொரோனாப் பெருந்தொற்று பரவுகை மீண்டும் தலைதூக்கியுள்ளது. நாளாந்தம் 100 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். மேலும் 3 முதல் 6 வரையான இறப்புகள் பதிவாகியுள்ளன. இந்த நிலையில் தற்போது குளிர்காலம் ஆரம்பித்துள்ளது. இதனால் கொரோனா நோய்த் தொற்று பரவுகை வேகமாகும். ஆகவே அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணிதல் உள்ளிட்ட சுகாதார பழக்கவழக்கங்களை பின்பற்றுதல் அவசியம். கொரோனாத் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் உடன் பெற்றுக் கொள்ள வேண்டும்- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் நிலையங்கள் மூடப்படும் அபாய நிலை!

## பெற்றோலியக் கூட்டுத்தாபன நடைமுறையால் சிக்கல்

**கொழும்பு, செப். 5**

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய கட்டண முறையால் 400 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என்று எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார் ராஜபக்ச தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அடுத்த நாளுக்கான எரிபொருள் தொகையை பெறுவதற்கு முன்கூட்டியே பணம் செலுத்தும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் இரவு 9.30 மணிக்கு முன்னர் பணம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அன்றைய வருமானத்துக்கு முன்பாக பணம் செலுத்துவது கடினமாக உள்ளது. இரவு 9.30 மணிக்குள் அல்லது அதற்கு முன் பணம் செலுத்தப்படாவிட்டால் அடுத்த நாள் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையத்தில் எரிபொருள் வழங்கப்படுவதில்லை. இதனால் சில எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்படுகின்றன. பல வாரங்கள் சிரமமில்லாத செயற்பாட்டுக்குப் பின்னர் மீண்டும் எரிபொருளுக்கான நீண்ட வரிசைகள் காணப்பட்டன. ஏனெனில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களால் இரவு 9.30 மணிக்கு முன் பணம் செலுத்த முடியவில்லை. லங்கா ஐ.ஓ.சி. நிரப்பு நிலையங்களும் இதேபோன்ற கட்டண முறையைக் கொண்டுள்ளன. ஆனால் அவை நள்ளிரவுவரை காலக்கெடுவைக் கொண்டுள்ளன -என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள பெற்றோலிய விநியோகத்தர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் கபில நாவுதுன்ன, நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ள நிலையில் நுகர்வோர் தேவையும் அதிகரித்துள்ளது. எரிபொருள் விநியோகம் அதிகரிக்கப்பட வேண்டும். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு நாளைக்கு 4 ஆயிரம் மெற்றிக்தொன் டீசல் மற்றும் 3 ஆயிரம் மெற்றிக்தொன் பெற்றோல் ஆகியவற்றையே விநியோகிக்கின்றது. பெற்றோலியக் கூட்டுத்தாபனக் கணக்கில் பணம் வைப்பிலிடப்படுகின்றபோதும் உரிய நேரத்தில் எரிபொருள் விநியோகம் நடப்பதில்லை. காசோலைகளை முன்கூட்டியே வழங்குவது வியாபாரிகள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கலாக உள்ளது. இது பல நிரப்பு நிலையங்கள் தற்காலிகமாக மூடப்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளது - என்றார். (எ-இ)



## விமானங்களுக்கான எரிபொருள் கையிருப்பு மீண்டும் பற்றாக்குறை

கொழும்பு, செப். 5

இலங்கையில் விமானங்களுக்கான எரிபொருள் கையிருப்பில் மீண்டும் பற்றாக்குறை அபாயம் ஏற்பட்டுள்ளது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் நாளொன்றுக்கு 13 லட்சம் லீற்றர் விமான எரிபொருள் தேவைப்படுகின்றது. எதிர்வரும் நாள்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கும் பட்சத்தில் தினமொன்றுக்கு 14 லட்சம் ஜெட் எரிபொருள் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போதைக்கு 10 அல்லது 15 நாள்களுக்கான விமான எரிபொருள் மட்டுமே கையிருப்பில் உள்ளது. மேலதிக விமான எரிபொருள் கொள்வனவுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருமானம் போதுமானதாக இல்லை. அதே நேரம் சிறிலங்கன் விமான சேவை கடந்த நான்கு ஆண்டுகளாக நூறு கோடிக்கும் அதிகமான எரிபொருள் கட்டண நிலுவையை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு செலுத்தாதுள்ளது. பெரும் நிலுவைத் தொகை காரணமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குகின்றது.

எரிபொருள், மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணம் என்று சகல விடயங்களிலும் பெரும் தொகை நிலுவைக் கட்டணத்தை வைத்துக் கொண்டுள்ள சிறிலங்கன் விமான சேவை இந்நாட்டின் அரச நிறுவனங்களில் மிகப் பெரும் நட்டத்தை சந்தித்துள்ள முக்கிய நிறுவனமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## கட்டாக்காலிகளால் அறுவடை பாதிப்பு

### மாந்தை விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு, செப். 5

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட பாண்டியன்குளம் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேசத்திலுள்ள விவசாய வயல் நிலங்களில் இரவு வேளையில் கட்டாலிக்காலி கால்நடைகள் புகுந்து நாசம் செய்கின்றன என அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கையின் அறுவடை காலம் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இன்னமும் பல கிராமங்களில் அறுவடைகள் நிறைவடையவில்லை. இந்தநிலையில் இரவு வேளைகளில் கால்நடைகள் வயல் நிலங்களுக்குள் இறங்கி நெற்கதிர்களை நாசம் செய்கின்றன.

ஆகவே கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ச-19)



## பல்வேறு இடங்களில் சைக்கிள்கள் திருட்டு!

### இரு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாணத்தில் பல்வேறு இடங்களில் சைக்கிள்கள் திருடிய குற்றச்சாட்டில் இரு சந்தேகநபர்கள் ஊர்காவற்றுறை.நாராந்தனை பகுதியில் வைத்து யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையம், யாழ். போதனா மருத்துவமனை, குருநகர் சின்னக்கடை சந்தை ஆகிய பகுதிகளில் சைக்கிள்களை திருடிய குற்றச்சாட்டிலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து மூன்று சைக்கிள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவர் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-26-27)



## திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகளுக்கு அமர்வு

கொடிகாமம், செப். 5

நீதி மற்றும் சுகாதார அமைச்சுக்களின் ஏற்பாட்டில் உலக சுகாதார அமைப்பின் அனுசரணையில் வடக்கு - கிழக்கு மாகாண திடீர் இறப்பு விசாரணை அதிகாரிகளுக்கான ஒரு நாள் செயலமர்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அநுராதபுரத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் மருத்துவர் லக்ஸ்மிசோமதுங்க, யாழ். போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் செ.பிரணவன் மற்றும் நீதி அமைச்சின் அதிகாரிகள் உட்படப் பலர் வளவாளர்களாக கலந்துகொண்டனர்.

இதன்போது மரண விசாரணைகளின் பின் மரணத்துக்கான காரணங்கள் எழுதும் புதிய நடைமுறைகள் மற்றும் மரணப் பதிவுகள் சர்வதேச தரத்தில் எவ்வாறு எழுதப்படவேண்டும் போன்ற விளக்கவுரைகள் வழங்கப்பட்டன. (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நாளொரு நல்வார்த்தை

"வாய்ப்பு கதவைத் தட்டும்போது அந்த சத்தம் குறித்து குறை கூறுபவரே ஒரு அவநம்பிக்கையாளர்"
- ஒஸ்கார் வைல்ட்




# ராஜபக்சக்களும் ராஜபாட்டைக் கனவும்

"ராஜபக்சக்கள் மீண்டெழுவார்கள், ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்றுவார்கள், அடுத்த தேர்தலில் அதை நிரூபிப்போம்" என்று மஹிந்தவும், பஸிலும் கோரஸாகச் சவால்விடத் தொடங்கிவிட்டனர்.

இலங்கையின் வரலாற்றில் முன்னெப்போதுமில்லாத வகையில் உருப்பெற்ற பொருளாதார நெருக்கடியின் விளைவாகத் தோற்றம் பெற்ற மக்கள் எழுச்சியால், மஹிந்த ராஜபக்ச பிரதமர் பதவியைக் கைவிட நேர்ந்தது. அதேபோன்று, அவரது சகோதரரான கோத்தாபய ராஜபக்சவும், நிறைவேற்று ஜனாதிபதி பதவியை உதறிவிட்டு, நாடு நாடாக அலையவேண்டியேற்பட்டது. 'ராஜபக்சக்களின் ஆட்டம் அவ்வளவுதான். இனிமேல் அவர்கள் ஆட்சிக் கட்டிலை நினைத்தும் பார்க்க முடியாது' என்று எண்ணப்பட்டு வந்த சூழலில், கோத்தாபயவின் நாடு திரும்புகையோடு தமது பழைய வீறாப்புப் பேச்சுகளை ராஜபக்சக்கள் கையிலெடுத்துள்ளனர்.

ராஜபக்சக்களின் இந்தத் துணிச்சலுக்கு மூலகாரணம் ரணில் எடுத்துவரும் மக்கள் விரோத நடவடிக்கைகளும், மக்களின் மறதி மீதுள்ள நம்பிக்கையுமே. 'கோத்தா கோ ஹோம்' என்ற கோஷத்தோடு இலங்கையைத் தாண்டியும் பரவிய மக்கள் எழுச்சியின் முன்னணிச் செயற்பாட்டாளர்களை ரணில் அரசாங்கம் தேடித்தேடி வேட்டையாடுகின்றது. போராட்டக்காரர்களின் குரல்களை தற்காலிகமாக முடக்குவதிலும், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் கலந்துகொண்டால் ஆபத்து வருமென்ற அச்சத்தை மக்களிடம் உண்டுபண்ணுவதிலும் ரணில் வெற்றிபெற்றுள்ளார் என்றே சொல்லவேண்டும்.

ரணில் உருவாக்கிய இத்தகைய சூழலால்தான் வெறும் ஒன்றரை மாதங்களில் மீண்டும் கோத்தாபய நாடு திரும்பும் நிலை உருவானது. 'அரகலய' போராட்டக்காரர்களை ரணில் நசுக்காமல் விட்டிருந்தால் இப்படி படை, பட்டாளத்தோடு கோத்தாபய கொழும்பு வீதியால் சென்றிருக்க முடியுமா? நாடே தீப்பற்றியிருக்கும். ஜனநாயகத்தைக் கொன்று, அதன் மீது ரணில் அமைத்துக் கொடுத்த பாதையில் ராஜபக்சக்கள் தங்கள் பழைய ராஜபாட்டையை நோக்கி நகரத் தொடங்கியிருக்கிறார்கள். இதையே மஹிந்தவினதும், பஸிலினதும் திமிர்த்தமான பேச்சுகள் வெளிப்படுத்துகின்றன.

இனிவரும் காலங்களில் மக்களின் மறதியும், ராஜபக்சக்களின் ராஜபாட்டைக்கான பாதையை இன்னும் அகலத் திறந்து விடக்கூடும். ராஜபக்ச அரசாங்கத்தில் இருந்த பொருள்களின் விலையைக் காட்டிலும் இப்போது அவை இன்னும் உயர்ந்து கொண்டிருக்கின்றன. வரிசையுகம் ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டாலும்கூட, அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றமோ, பணவீக்கமோ இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. இனியும் அது கட்டுப்பாட்டுக்குள் வரப்போவதில்லை என்பதையே கண்முன் நடக்கும் சம்பவங்கள் உணர்த்துகின்றன. இனிமேல் ரணிலுக்குக் குடைச்சலைக் கொடுத்து, சர்வகட்சி அரசாங்கத்துக்கு பதிலாக பெரமுன அரசாங்கத்தை ராஜபக்சக்கள் அமைக்க வைப்பார்கள். கோத்தாபய அல்லது ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த யாரேனும் ஒருவர் பிரதமர் ஆவார்.

நாட்டின் சீர்கேட்டுக்கான அத்தனை பழியையும் ரணில் மீது சுமத்திவிட்டு, கள்ளம் கபடமற்றவர்கள் போல தேர்தலை ராஜபக்சக்கள் எதிர்கொள்வார்கள். இப்போதிருப்பதை விடவும், இலங்கையின் பொருளாதார நிலை மோசமாகும் போது 'ராஜபக்சக்கள் ரணிலை விட பரவாயில்லை' என்ற மனோநிலை மக்களுக்கு வரக்கூடும். இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் ராஜபக்சக்களும், அவர்களின் அதிகாரவெறியும், ஊழலும், குடும்ப ஆட்சியும், இனவாத அரசியலுமே காரணிகள் என்பதை மறந்துவிட்டு, பொதுஜன பெரமுனவுக்கு மக்கள் வாக்குகளை அள்ளி வழங்க, மீண்டும் ராஜபக்சக்கள் மக்களின் அமோக ஆதரவோடு இந்த நாட்டின் மணிமகுடத்தைச் சூடிக்கொள்ளமுடியும். அதற்காகவே அவர்கள் இதுவரை பதுங்கியிருந்தார்கள். இப்போது கோத்தாவும் வந்துவிட்டதால், பழைய பலத்தோடு பாய நினைக்கின்றனர்.

ரணில் ஓர் அரசியல்வாதி. பதவிக்காகவும், அதிகாரத்துக்காகவும் ஓர் அரசியல்வாதியாக , அவர் ராஜபக்சக்களை காப்பாற்றுகின்றார். அவர்களின் மீளெழுச்சிக்கு வழிவகுக்கின்றார். ரணில் தன் அதிகாரப் பசிக்காகச் சட்டத்தின் பெயரால் செய்யும் அக்கிரமங்களையும், ராஜபக்சக்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளையும் தடுக்கமுடியாத நிலையுண்டு. ஆனால் மக்கள் அவ்வாறில்லையே. அவர்கள் இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் யார் காரணம்? ஏன் நாடு இன்னமும் இப்படி இருக்கின்றது? யார் நம்மை ஆட்சி செய்தால் நாடு சுபீட்சமானதாக இருக்கும்? என்றெல்லாம் அலசி ஆராய்ந்து, உணர்ச்சி அரசியலுக்குள்ளும், போர் வெற்றிவாதத்துக்குள்ளும் மூழ்காமல் முடிவெடுத்தால், நிச்சயம் ராஜபக்சக்களின் கனவைக் கருகச் செய்யலாம். ரணில் பொத்தி வைத்து வளர்க்கும் 'ராஜபக்சக்களின் ஆட்சி' என்ற விஷச்செடியைக் கருகச் செய்வதும், விருட்சமாக்குவதும் இனி மக்களின் கையில் தான்.

# தமிழ்க் கட்சிகள் அனைத்தும் அரசாங்கத்தில் இணையலாம்!

## சாகல ரத்னாயக்க தெரிவிப்பு

**கொழும்பு, செப். 5**

**'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்க் கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றலாம். அதற்கான கதவுகள் திறந்தே உள்ளன'- இவ்வாறு ஜனாதிபதி பணியாட்தொகுதி பிரதானியும், ஜனாதிபதியின் பாதுகாப்பு விவகார ஆலோசகருமான சாகல ரத்னாயக்க தெரிவித்தார்.**

சர்வகட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு திரட்டுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளனவா? என எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாம் தமிழ்க்கட்சிகளுடனும் பேச்சு நடத்திக் கொண்டிருக்கிறோம். சம்பந்தன், சுமந்திரன் ஆகியோருடனும் விக்னேஸ்வரனுடனும் பேசி வருகிறோம். எமது கதவு அனைவருக்கும் திறந்திருக்கிறது.

ஏனெனில் இது நாட்டை முன்நிறுத்தி யோசிக்க வேண்டிய காலம். தமிழ்க்கட்சிகள் எம்முடன் இணைந்து பணியாற்றுவதில் எம் தரப்பில் எந்தத் தடையும் இல்லை.

பேச்சு மூலம் தடைகளைக் கடந்து பிரச்சினைகளுக்கு முடிவுகாண முடியும் எனக் கருதுபவரே எமது ஜனாதிபதி. இது நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டிய தருணம் என்பதை எவரும் மறந்துவிடலாகாது- என்றார். (ம-22)

# உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகுக!

## பெரமுனவினருக்குப் பஸில் அறிவுறுத்து

கொழும்பு, செப். 5

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை எதிர்கொள்ள தயாராகுமாறு பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களுக்கு, கட்சியின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார்.

பெரமுனவின் தலைமைப்பீட உறுப்பினர்களுக்கும், தொகுதி அமைப்பாளர்களுக்கும் இடையிலான சந்திப்பு சில நாள்களுக்கு முன்னர் நடைபெற்றது. இதன்போது சமகால அரசியல் மற்றும் அடுத்தக்கட்ட நகர்வுகள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

"உள்ளாட்சி சபைத் தேர்தல் அடுத்த மார்ச்சில் நடைபெறலாம். எனவே, தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்" என பஸில் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

"சேர், மக்கள் பக்கம் தலைகாட்ட முடியவில்லை, எப்படி திடீர் தேர்தலுக்கு தயாராவது?" என தொகுதி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். இதற்கு பதிலளித்துள்ள பஸில் "ஆரம்பத்தில் எதிர்ப்பு வரும், மக்களுடன் உரையாடுங்கள். நிலைமையை தெளிவுபடுத்துங்கள். எல்லாம் சரிவரும்" என ஆலோசனை வழங்கியுள்ளார் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

**நாளை** 06.09.2022 செவ்வாய்க்கிழமை ஆவணி 21

சுபநேரம் : 10.34 - 12.04
ராகுகாலம்: 03.04 - 04.34

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதியோரின் சஞ்சிகைகள் விற்பனை

யாழ்ப்பாணம், செப்.5

90 வயதைக் கடந்த முதிவர்களைக் கௌரவிக்கும் வகையில், அவர்கள் வெளியிட்ட சஞ்சிகைகள் தெல்லிப்பழை துர்க்காதேவி அம்மன் ஆலய திருவிழாக் காலத்தில் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றன என்று இலங்கை முதியோர் சுக வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது.

இன்று முதல் நாளைமறுதினம் 7ஆம் திகதிவரை துர்க்கை அம்மன் வாசிகசாலையில், குறைந்த விலையில் சஞ்சிகைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் முதியோர் சுகவாழ்வுக் கழகம் அறிவித்துள்ளது. (எ-இ)



மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய மகோற்சவத்தின் தேர்த்திருவிழா ஆலயகுருக்கள் சி.கிருபாகரக்குருக்கள் தலைமையில் நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. (ச-131)

## 'அற்றைத் திங்கள்' நிகழ்வு கொழும்பில்

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் அற்றைத் திங்கள் நிகழ்வு எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது தமிழின் மூத்த படைப்பாளிகளின் தகைசான்ற ஆளுமைகள், வாழ்வியல் அனுபவங்கள், கலை இலக்கிய நட்பு எழுகைகள், பண்பாட்டுத் தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் போன்ற அனுபவங்கள் பகிரப்படவுள்ளன.

கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் மூத்த எழுத்தாளர் மருத்துவர் தி.ஞானசேகரன் உரை நிகழ்த்தவுள்ளார். (ச)



சாவகச்சேரி - நுணாவில் விளைவேலி தாளையடி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த் திருவிழா அண்மையில் பக்தர்கள் சூழ இடம்பெற்றது. இதன்போது விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை, துர்க்கை அம்மன் ஆகிய கடவுளர்கள் மூன்று தேர்களில் வீதியுலா வந்து அடியவர்களுக்கு அருள் பாலித்தனர். (ச-131)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் தரம் 7, தரம் 10 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

கிளிநொச்சி பிராந்திய பொதுச் சுகாதார பரிசோதகர் வி.ஐங்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்த மருத்துவ முகாமில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி வி.கஜேந்திரன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டார். (ச-159)

**வீடு விற்பனைக்கு**

நாவற்குழி சந்திக்கு 200m தூரத்தில் 4 பரப்புக் காணியும் வீடும் (சகல வசதி) விற்பனைக்குண்டு.

**076 492 8117** (ல076 492 8117)

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 01 - 1938

மறைவு 02 - 09 - 2022



## மகேஸ்வரி ஞானசுந்தரம்

யாழ்.இணுவில் கொக்கன் வளவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி ஞானசுந்தரம் அவர்கள் (02.09.2022) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-செல்வநாயகம் தம்பதியரின் அன்பு புதல்வியும் காலஞ்சென்ற ஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும் மகேஸ்வரன், இராணிமலர், காலஞ்சென்ற வசந்தி மற்றும் வத்சலா, மகேந்திரன், சுதாகரன் ஆகியோரின் அருமைத் தாயாரும் நாகவேல்நாயகி, ஜெகதீசன், பூபாலசிங்கம், இராஜரூபன், பதுமநிதி, கௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சண்முகலிங்கம், யோகம்மா மற்றும் சந்திராதேவி, இந்திராதேவி காலஞ்சென்ற கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் செந்தூரன், கிஸ்ணகிரி, மயூரி, ஜெகன், திவியா, அபிராமி, கபிலன், சபித்தா, திலக்சி, விக்னேஸ், சதுர்த்திகா, அஞ்சுகா, அபிசேக், அக்சரா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஜேடன், மாயா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2022) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் மு.ப 10 மணிக்கு கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்ப[illegible] ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 - 11 - 1965

மறைவு 03 - 09 - 2022



## ஞானதாஸ் நொயிலின் ஜெயமதி

(ஆசிரியை புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை)

இல.41 டேவிற் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானதாஸ் நொயிலின் ஜெயமதி அவர்கள் 03.09.2022 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அகஸ்ரின் அனக்கிளற் ஜீலியான் ஆகியோரின் அன்பு மகளும் யேசுதாஸ் ஞானதாஸின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யேசுதாஸ் ரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செவின் சிறிமதி அயலின், அன்றூசிறிதரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஜெனிபர், யூடிற்றா ஆகியோரின் பெரியதாயாரும் லுக்கிரற்சியாவின் மாமியாரும், காலஞ்சென்ற ஜோண் குலசேகரம், றமேஸ், றஞ்சினி, அல்பிறட் மற்றும் காலஞ்சென்ற அரியதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.09.2022) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் யாழ்/மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல் : குடும்பத்தினர்.

**077 755 9769**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசு தயாளன்
அதிபர்

# 21ஆம் நூற்றாண்டுக்கான கல்வியின் மேம்பாடுகளில் பாடசாலையும் ஆசிரியரும்

இன்றைய மாற்றமடைந்து வரும் உலகில், எண்முறைகளால் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட உலகின் அங்கத்தவர்கள் வாழ்வில் வெற்றியடைய வேண்டுமானால், பாடசாலைக் காலத்தில் அவர்கள் புதிய அறிவையும் திறன்களையும் பெற்றவர்களாக விளங்குதல் அவசியமானது. 20ஆம் நூற்றாண்டுக்கான வாழ்க்கைத் திறன்களானவை தற்காலத்திலும் பார்க்க மாறுபட்டதாகும். பிள்ளைகளை வகுப்பறைச் செயன்முறைகளில் வெற்றியடையச் செய்தல் என்பதற்கப்பால் வாழ்க்கைச் செயன்முறையில் வெற்றியடையச் செய்தல் என்பது மிகவும் அவசியமானதாகும்.

உலக இயங்கியற் செயன்முறையில் இணைந்து கொள்ளும் இன்றைய காலக் கற்போன் சிறந்த பிரஜையாக விமர்சனப் பாங்கான சிந்தனையாளனாக, தகவல் தொடர்பாடற் தேர்ச்சியுள்ளவனாக, உலகச் செயன்முறையின் தேவையினை அறிந்தவனாக, சிறந்த தொடர்பாடற் கோலத்தைக் கொண்டவனாக விளங்குதல் அவசியமானதாகும்.




> பிள்ளையினுடைய உளவியல் ரீதியான சமூக ரீதியான தேவை ஒழுங்குகளை தெளிவாக அறிந்து அதற்கேற்ப கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொண்டால் அதியுயர் கற்றல் அடைவுகளை அடைந்து கொள்ள முடியும்.

### 21ஆம் நூற்றாண்டில் கல்வியின் தன்மை?

21ஆம் நூற்றாண்டுக் கல்வியானது எவ்வாறு கற்கவேண்டும் என்பதனை எடுத்துக் கூறுவதாய் இருக்கவேண்டும். ஆக்கச் சிந்தனை கூட்டிணைவினையும் விமர்சனப்பாங்கான சிந்தனைக் கோலத்தையும் கட்டியெழுப்புவதற்குக் கற்பிப்பதாக இருக்கவேண்டும். பிள்ளைக்குக் கற்பிக்கும்போது எவ்வாறு தொடர்பாடலை மேற்கொள்வது என்பதற்கப்பால் விளைதிறனான தொடர்பாடல் தொடர்பில் உணர்த்துவதாகவும் இருக்க வேண்டும். இத்தகைய திறன்களையே பிள்ளைகள் வளர்க்க வேண்டியவர்களாக உள்ளனர். இதன் மூலமே இன்றைய நிலையில் மட்டுமல்லாது எதிர்கால இயங்கியல் தொழில் உலகிலும் தன்னை நிலை நிறுத்துவதற்கு கல்வி உதவுவதாக இருக்கும்.

கடந்த நூற்றாண்டு காலப்பகுதியிலும் பார்க்க 21ஆம் நூற்றாண்டுக்கான கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் விரைவாக மாற்றமடைந்துள்ளன. உலகளாவிய அபிவிருத்திச் செயன்முறையின் மாற்றங்களானவை புதிய வகையிலான கற்றலுக்கான தேவையை ஏற்படுத்தியுள்ளன. உலகச் சவால்களை வெற்றிகொள்ளத்தக்க வகையில் முறையான கல்வி மாற்றமடைய வேண்டியுள்ள நிலையில் புதிய வடிவிலான மாற்றங்கள் வேண்டப்படுவதாயுள்ளது. இதன் காரணமாக கடந்த நூற்றாண்டின் கற்பித்தற் சிந்தனையில் இருந்தும் மாறுபட்ட வகையில் செயற்பாட்டு முறையிலான கற்பித்தல் முறைக்குச் செல்ல வேண்டியவர்களாக ஆசிரியர்கள் உள்ளனர்.

உலகமயமாக்கல் செயன்முறையின் பின்னணியிலேயே 21ஆம் நூற்றாண்டுக்கான கல்விச் சூழல் வடிவமைக்கப்பட வேண்டியுள்ளது. இங்கு அறிவு வேலைச் செயன்முறை மற்றும் முயற்சியாண்மை என்பன முக்கியத்துவம் உடையதாகும். பாடசாலையை விட்டு நீங்குவோரது கல்வியிலும் திறன் அபிவிருத்தியிலும் அதிகரித்தளவிலான கேள்வியினை உலகமயமாக்கலும் தொழில்நுட்ப மாற்றங்களும் ஏற்படுத்தியுள்ளன.

முன்னைய காலங்களில் பாடசாலையை விட்டு நீங்குவோரிலும் பார்க்க தற்காலத்தில் பாடசாலைக் கல்வியை விட்டு நீங்குவோரிடம் அதிகரித்தளவிலான தொழிற்திறன் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே ஆரோக்கியமான உற்பத்தித்திறன் எதிர்கால வேலையுலகில் நின்று நிலைத்திருக்கக் கூடிய திறன்கள் உடையவர்களாக்குவதற்கான ஊக்குவிப்புக்கள் கற்றல் கற்பித்தற் செயன்முறை மூலம் இடம்பெற வேண்டும்.

21ஆம் நூற்றாண்டுக்கான கற்றல் என்பது பிள்ளைகளானவர்கள் கற்கும் முறைகளுடனும் வளங்களுடனும் உலகளாவிய ரீதியில் தொடர்புபடலைக் குறித்து நிற்கின்றது. இங்கு அவர்கள் தாமாகவே பிரச்சினை தீர்க்கும் வல்லமையுள்ளவர்களாகவும் தமது கற்றற் செயற்பாட்டைத் தாமே கட்டியெழுப்புபவர்களாகவும் பொருத்தமான தொடர்பாடற் செயன்முறையினூடாக ஏனையவர்களுடன் கூட்டிணைந்து செயற்படுபவர்களாகவும் ஆக்கமலர்ச்சிச் சிந்தனை உடையவர்களாகவும் விரைவாக மாறும் சூழல்நிலைகளுக்குள் தம்மைப் பொருத்திக் கொள்பவர்களாகவும் காணப்படுவர். கல்விச் செயன்முறையில் மூலம் அதிகரித்தளவிலான கல்வியினை வழங்குவதோடு தொடர்ச்சியான வலுவூட்டற் செயன்முறைகளும் இடம்பெற வேண்டியது அவசியமாயுள்ளது. இங்கு உலக மயமாக்கற் செயன்முறைக்கு இணைந்த வகையில் சமூக மாற்றங்களும் ஏற்படுத்தப்படுவது அவசியமானதாயுள்ளது. தமது எதிர்காலச் சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய சமநிலை ஆளுமைத்திறன்கள் உடையவர்களையும் சமூகத்துக்காக வளர்க்கவேண்டியது அவசியமானதாகும்.

21ஆம் நூற்றாண்டுக்கான கற்றல் என்பது மாணவனை நிபுணத்துவம்மிக்கவனாக மாற்றும் தன்மையது. இங்கு பிரச்சினை தீர்க்கும் திறன், விமர்சன ரீதியான சிந்தனைத் திறன், எண்முறைமைகள் சார்பான திறன்கள் (டிஜிற்றல்), நியமத் தொழில்நுட்பத்திறன், சேர்ந்தியங்கும் திறன் என்பவற்றின் மூலம் எதிர்கால உலகில் ஓர் உன்னத சமூகப் பிரஜையாக வாழமுடிதலைக் குறித்து நிற்கின்றது. இதற்காக மாறும் தொழில்நுட்ப உலகில் வாழக் கூடிய நிலையைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய திறன்களையும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

### இன்றைய காலகட்டத்துக்கான வகுப்பறைக் கற்றலின் தன்மை

மேற்கூறப்பட்டவற்றினை அடைந்து கொள்வதற்காக இன்றைய வகுப்பறைக் கற்றல் - கற்பித்தலானது பின்வருவனவற்றினை உள்ளடக்கியதாக அமைந்து காணப்பட வேண்டும்.

1. கற்பித்தற் தந்திரோபாயங்களானது கற்கும் அனைவருக்கும் கையாளக்கூடியதாக இருக்க வேண்டும். இங்கு கற்கும் ஒவ்வொருவரும் தமது இயலுமைக்கும் கற்றலுக்கான ஆயத்த நிலைக்குமேற்ப கற்றலில் ஈடுபட வாய்ப்பளிக்கப்படல் வேண்டும்
2. நவீன கற்பித்தற் தொழில்நுட்பத்திறன்களை வகுப்பறையில் முன்னெடுத்துச் செல்லக் கூடியதாயிருத்தல் வேண்டும்.
3. மாணவர்கள் மற்றும் ஏனையோருடன் நேரான உறவுநிலையினை வளர்க்கக்கூடிய திறன் அவசியமானது. வகுப்பறைச் செயற்பாட்டில் ஆர்வத்துடனான பங்குபற்றுதலுக்கு உதவக் கூடிய வகையிலான ஆளிடைத்திறன் விருத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்போது ஆசிரியர், சகபாடிகள் என்போருக்கிடையிலான தொடர்பின் அதிகரிப்பானது புதிய அறிவு உருவாக்கத்துக்குப் பங்காற்றுவதாக இருக்க வேண்டும். பிள்ளைகளிடையே முற்போக்கான சிந்தனைத் திறன்விருத்தி என்பது அவசியமானதாகும். இதன் மூலம் மாறுபடும் உலகின் தொழில்நுட்ப மாற்றங்கள், சவால்களை வெற்றி கொள்வதற்கான முற்திட்டங்களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

### 21ஆம் நூற்றாண்டுக் கல்வியில் பாடசாலைகளின் கவனக்குவிவு

21ஆம் நூற்றாண்டுத் திறன்களுக்கான கற்றல் செயற்பாடுகள் தொடர்பில் பாடசாலை பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

1. உயர்தொழில்நுட்பம் நிறைந்த திறன்களைப் பெறுவதற்கான தயார்படுத்தல்களைப் பாடசாலை எவ்வாறு மேற்கொள்கின்றது .அல்லது மேற்கொள்ளவேண்டும்.
2. பாரம்பரியமான கற்றல் முறைகளுக்கப்பால் முறைசாராவகையில் சுதந்திரமான கற்றலை எவ்வாறு மேற்கொள்ளச் செய்தல்
3. தொழில் நுட்பத்தினைக் கற்றலுக்காக எவ்வாறு பயன்படுத்துவது, வகுப்பறை நிலைமைகளில் அதன் பயன்பாட்டு நிலை எத்தகையது என்பன தொடர்பில் கவனம் செலுத்துவதாக இருக்கவேண்டும்.

எனவே பிள்ளையினுடைய உளவியல் ரீதியான, சமூக ரீதியான தேவை ஒழுங்குகளை தெளிவாக அறிந்து அதற்கேற்ப கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைத்துக் கொண்டால் அதியுயர் கற்றல் அடைவுகளை அடைந்து கொள்ளமுடியும்.

ஆரோக்கியமான ஜனநாயகத் தன்மை கொண்டதும் நேர்மயமானதும் அச்சுறுத்தலுமற்ற கற்றலுக்கு உதவுதல் என்பது தொடர்பில் கல்வி நிர்வாகிகள் அதிபர்கள், ஆசிரியர்கள் என்போர் கவனம் செலுத்திச் செயற்படுதல் அவசியமானதாகும். மேற்குறித்த பிரிவினர் தமது செயற்பாடுகள் தொடர்பில் சுயமதிப்பீடுகளை மேற்கொள்வது என்பது காலத்தின் தேவையாகவுமுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவில்...

11ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**சுப்பிரமணியம் அமிர்தலிங்கம்**

தோற்றம் 25.11.1957 | மறைவு 27.08.2011

திதி: தேய்பிறை திரியோதசி

**தனலட்சுமி அமிர்தலிங்கம்**

தோற்றம் 29.03.1957 | மறைவு 15.09.2021

திதி: வளர்பிறைத் தசமி

ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
உங்கள் பிரிவின் ஆறாத காயங்களும்
நீங்காத உங்கள் நினைவுகளும்
நிறைந்த வாழ்வதனில் பயணிக்கின்றேன்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மகள் - 077 422 2167

(CS 46388) (3/6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21.06.1955 | மறைவு 15.09.2021

அமரர் திருமதி

**றஞ்சினி சற்குணானந்தம்**

ஆண்டொன்று சென்றுவிட்டாலும்
அம்மா உன் அன்பு முகமுகம்
அறிவும், பண்பும் மறக்க முடியாதம்மா!
எம் இதயக் கோவிலில் என்றும்
- வீற்றிருபாய் அம்மா!

46/1, செட்டித்தெரு லேன்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

(cs 46389) (2.6)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 12 • 02 • 1954

ஆண்டவன் அடியில் 15 • 09 • 2021



**அமரர் சுந்தரலிங்கம் சற்குணதேவி**

நாளொன்று கிழமையென நகர்ந்து தான்
மாதமென ஆண்டொன்று ஆனதுவோ
உன்குரல் கேளாது அன்பு காட்டி
எமை அரவணைத்து புன்னகைத்த வண்ணம்
உறவுகளோடு உறவாடி நீ நின்றாய்
தரணியிலே நாங்கள் தலை நிமிர்ந்து
நிற்பதற்கு உன்னை உருக்கி
எமை வளர்த்தெடுத்தாய் தாயே..!

நீ அணைந்து போனதால் நம்
இல்லம் இருளாகி போனதம்மா
உனை இழந்து நாமெல்லாம்
உருகுந்து போகிறோமே வலியோடு
தவிக்கிறோம் உன் நினைவோடு எந்நாளும்
எத்தனை பிறப்பிலும் உங்களுக்கு
பிள்ளைகளாய் பிறந்திட
இறைவனை வேண்டி - உம்
ஆத்மா சாந்தியடைய வணங்குகிறோம்.

"சுந்தரதேவி இல்லம்"
48/6, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார்கட்டு, அரியாலை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(cs 46390) (2.7)

# மரண அறிவித்தல்



**சியாமளா ததீஸ்குமார்**

பெரியபளை. பளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சியாமளா ததீஸ்குமார் கடந்த (01.09.2022) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், சுப்பிரமணியம் - தனபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், ததீஸ்குமார் அவர்களின் பாசமிகு மனைவியும், ஹர்ஷ்விந்தின் பாசமிகு தாயாரும், சத்தியலீலா, இந்திரலீலா, யவனராணி, கோமளா, மஞ்சுளா, சிவகுமார், பகிதரன் ஆகியோரின அன்புச் சகோதரியும், யோகராசா, அருண்குமார், மனோகரன், ஜீவரட்ணம், சுரேஸ், விரேகா, பவானி, பத்மினி, சுரேஸ், றமேஸ், நந்தன், மகேஷ், திலாானி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2022) திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு ஆரம்பித்து பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணிக்குத் தம்பகாமம் மலயான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியபளை,
பளை.

[illegible] - 077 136 8233
[illegible] - 077 599 3442
மைத்துனர் - 020 842 27454

தகவல் :
குடும்பத்தினர்

(cs.20578) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கியிலிருந்து கோதுமை: விலை குறைவதற்கு வாய்ப்பு

## மொத்த இறக்குமதியாளர்கள் சங்கம் நம்பிக்கை

**கொழும்பு, செப். 5**

**துருக்கியிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள கோதுமை மாவின் விநியோகச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டதும் இம்மாத இறுதிக்குள் கோதுமை மாவின் விலை குறைவடையலாம் என மொத்த இறக்குமதியாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்ததாவது:-

இந்தியா கோதுமை ஏற்றுமதியைத் தடைசெய்த நிலையில் நாட்டில் கோதுமைமாவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தநிலையில் துருக்கியிருந்து கோதுமை மாவை கொள்முதல் செய்வது தொடர்பில் இலங்கை பரிசீலித்து வருகின்றது.

இதுதொடர்பில் கலந்துரையாடுவதற்கு எமது அதிகாரிகள் துருக்கி சென்றுள்ளனர். இம்மாத நடுப்பகுதியில் துருக்கியிலிருந்து கோதுமை மா இறக்குமதி செய்யப்படும் என எதிர்பார்க்கின்றோம். இதேவேளை உள்ளூர் இறக்குமதியாளர்களது மோசடி மற்றும் உள்ளூர் கோதுமை மா இறக்குமதியாளர்கள் போதியளவு கையிருப்புகளை சந்தைக்கு வெளியிடத் தவறியமை ஆகியவை காரணமாக சந்தையில் தற்போது கோதுமைமாவுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது -என்றார். (ச-இ)

# வழிகாட்டல் கருத்தமர்வும் விதைப்பொதி கையளிப்பும்

யாழ்ப்பாணம், செப். 5

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் 'மாணாக்க உழவர்' எனும் தொனிப்பொருளில் மாணவர்கள் இடையே நடத்தப்படவுள்ள வீட்டுத்தோட்டப் போட்டியை முன்னிட்டு செயன்முறை வழிகாட்டற் கருத்தமர்வும் விதைப்பொதிகள் கையளிக்கும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஓய்வுநிலைப் பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன், விவசாய விஞ்ஞானி கலாநிதி எஸ்.ஜே.அரசகேசரி ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப்பற்றாக்குறை என்பவை குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த வீட்டுத்தோட்டப் போட்டிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ச-27-20)

# கோதுமை மா விலை உயர்வால் உணவகங்களை மூடும் ஆபத்து

கொழும்பு, செப். 5

கோதுமை மாவின் விலை தொடர்ச்சியாக அதிகரிக்கப்பட்டு வருவதால் உணவகங்கள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என இலங்கை உணவக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் இலங்கை உணவக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்ததாவது:

நாட்டில் அண்மைக்காலமாக கோதுமை மாவின் விலை சடுதியாக அதிகரிக்கப்பட்டு வருகின்றது. ஒரு கிலோ கோதுமை மா தற்போது 400 ரூபாவுக்கு மேலாக விற்பனை செய்யப்படுகின்றது.

இதன்காரணமாக பாண் உள்ளிட்ட அனைத்து பேக்கரி உற்பத்திகளதும் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஆயினும் உணவகங்கள் மற்றும் ஹொட்டல்கள் உணவுகளின் விலையை அதிகரிக்கவில்லை. இந்த நிலையில் கோதுமை மா அதிகரிப்பால் நாட்டிலுள்ள உணவகங்கள் உள்ளிட்ட ஹொட்டல்களை மூட வேண்டிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் -என்றார். (ச-இ)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 04 . 1931



மறைவு 17 . 08 . 2021

அமரர் திரு. முருகேசு இராசையா

திதி : தசமி வளர்பிறை (05.09.2022)

ஆண்டொன்று ஓடி மறைந்ததுவோ
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் - எம்
ஆருயிர் அப்பாவைப் போல் வருமா?
ஊர் போற்றும் உத்தமராய்
செல்வாக்கு மிக்கவராய்
சென்ற இடம் சிறப்பித்து
வாயாரப் புன்னகைத்து
வாஞ்சையுடன் வரவேற்று
வந்தோரை உபசரித்து
வாழ்வாங்கு வாழ்ந்த அப்பா - இன்று
மௌனமாய் மாயமானார்...

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் நினைவுகளுடன்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

(CS 20618 (3/6)


# பனம்பழ ஜாம் பயிற்சிநெறி

கொடிகாமம், செப்.5

பனம்பழ ஜாம் தயாரிப்பதற்கான பயிற்சிநெறி நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு கைதடி பனை ஆராய்ச்சி சபை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியில் அனைத்து உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில் முனைவோர்கள் கலந்துகொள்ள முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-159)

## 200ஆவது ஆண்டை முன்னிட்டு

# பெரியபுலம் ம.வி.யில் திறந்தவெளி அரங்கு



யாழ்ப்பாணம், செப். 5

யாழ்ப்பாணம், பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200ஆவது ஆண்டை முன்னிட்டு, பழைய மாணவர்களின் நிதியுதவியில் அமைக்கப்படவுள்ள திறந்தவெளி அரங்குக்கு அண்மையில் அடிக்கல் நடப்பட்டது.

வண்ணார்பண்ணையில் உள்ள பெரியபுலம் மகாவித்தியாலயம் 200ஆவது ஆண்டு நிறைவு விழாவை அடுத்த வருடம் கொண்டாடவுள்ளது. இதைமுன்னிட்டு வித்தியாலயத்தின் 1991ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த பழைய மாணவர்களால் 4.5 மில்லியன் ரூபா செலவில் இந்தத் திறந்தவெளி அரங்கு அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் சுமார் 25 வருடங்களாக குறித்த வித்தியாலயத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி ஞானசூரியனால் அண்மையில் நடப்பட்டது. (ம)



# ஒட்டுசுட்டான் பகுதியில் 20 கிலோ கஞ்சா மீட்பு!

## சந்தேகநபர்கள் தப்பியோட்டம்

முல்லைத்தீவு, செப். 5

ஒட்டுசுட்டான் மாங்குளம் 19ஆம் கட்டைப் பகுதியிலிருந்து கடத்தப்படவிருந்த 20 கிலோ கஞ்சா இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் கஞ்சா கடத்தப்படவிருப்பதாக இராணுவத்தினருக்கு கிடைத்த தகவலையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த இராணுவத்தினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டபோதே கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கஞ்சா இராணுவத்தினரால் ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பொலிஸார் சந்தேகநபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடியோர் உள்ளே கோத்தாபய வெளியே!

## சஜித் விசனம்



கொழும்பு, செப். 5
போராட்டக்காரர்களால் விரட்டியடிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, மீண்டும் நாடு திரும்பி வீட்டுக்குள் இருக்கின்றார். ஆனால், போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது அரசு வன்முறையைப் பிரயோகித்து அவர்கள் மீது அடக்குமுறைகளை மேற்கொண்டு அவர்களைச் சிறைச்சாலைகளுக்குள் அடைத்து வருகின்றது - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
இருநூற்று இருபது இலட்சம் மக்கள் துன்பங்களை எதிர்கொண்டு வரும் சந்தர்ப்பத்தில், அரசு அமைச்சுப் பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கு முண்டியடித்துக்கொண்டு இருக்கின்றது.

எதிர்காலத்தில் மின்வெட்டு ஏற்படும்போது நாட்டு மக்கள் நடுங்கத் தொடங்குவார்கள். மக்கள் ஏற்கனவே வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.

மத்திய வருமானம் கொண்ட நாடாகவே ஆரம்பத்தில் எமது நாட்டைக் கூறினர். தற்போது எமது நாடு குறைந்த வருமானம் பெறும் நாடுகளின் பட்டியலிலேயே இணைக்கப்பட்டுள்ளது.

பாணின் விலை 300 ரூபாவாக அதிகரித்துள்ளது. மின்கட்டணம், நீர்க்கட்டணம் என அனைத்துக் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. மண்ணெண்ணெயின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது - என்றார். (அ-ஒ-22)

# உடனடியாக சுகாதாரத்துறையில் கொள்கை மாற்றம் அவசியம்

## ரணில் சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 5
சுகாதாரத்துறையில் உடனடிக் கொள்கை மாற்றம் அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடு குறித்து ஆராய்வதற்காக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கையளிக்கப்பட்டது.

மருந்துத் தட்டுப்பாடு மற்றும் மருந்துப் பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களைப் போக்குவதற்கான உடனடி முறைமை அவசியம் என்று இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மருந்துகள் உட்பட சுகாதாரத்துறையின் ஏனைய தேவைகள் தொடர்பில், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்திடம் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முழு சுகாதாரத் துறைக்கும் கொள்கை மாற்றம் அவசியம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு சுட்டிக்காட்டினார். (அ-ஒ-இ)

# 'மேலவை இலங்கை கூட்டணி' புதிய அரசியல் கூட்டு உதயம்

கொழும்பு, செப். 5
மொட்டுக் கட்சி தலைமையிலான கூட்டணியிலிருந்து வெளியேறி, நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் கட்சிகள் இணைந்து 'மேலவை இலங்கைக் கூட்டணி' எனும் பெயரில் புதியதொரு அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளன.

புதிய கூட்டணியின் தலைவராக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸவும், பொதுச்செயலாளராக இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஜி.வீரசிங்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய அமைப்பாளர் பதவி, நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவுக்கு வழங்கப்பட்டுள்ளது. பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண ஆகியோர் பிரதித் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் மற்றும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

வெளிநாட்டுத் தூதுவர்கள், தேசியவாத அமைப்புக்களின் பிரதிநிதிகளும் புதிய அரசியல் கூட்டணியின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். (அ-ஒ-44)

# பிள்ளையானின் மாநாட்டில் பிரதம அதிதியாக - நாமல்

மட்டக்களப்பு, செப். 5
நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தேசிய மாநாடு நேற்று மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (அ-ஒ-22)

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 - 01 - 1949

மறைவு
04 - 09 - 2022



## சின்னத்துரை பூபாலசிங்கம்

அளவெட்டியை பிறப்பிடமாகவும் ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பூபாலசிங்கம் நேற்று (04.09.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை அழகம்மா தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்ற முத்தையா இரத்தினமமா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற பாலசௌந்தரியின் அன்புக் கணவரும் ஜனகன், பானுசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பவதி, பராசக்தி, பாலச்சந்தர், மனோகரி, ஜெகநாதன், இரத்தினமலர், ஜெயரஞ்சினி, சிவமலர் மற்றும் காலஞ்சென்றவர்களான குணவதி, சிவலிங்கம், கண்ணபிரான், ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற மகேஸ்வரன், பாலயோகினி, பாலேந்திரன், பரமானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2022) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஏழாலை காடா கடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 - 05 - 1937

மறைவு
03 - 09 - 2022



## திரு.ஐயம்பிள்ளை நடராசா

### (ஓய்வுநிலை காணி உத்தியோகத்தர்)

நெடுந்தீவு மேற்கு நெல்வரையை பிறப்பிடமாகவும், முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ஐயம்பிள்ளை நடராசா அவர்கள் 03.09.2022 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை, அன்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான முத்தையா, செங்கமலம், தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற அமிர்தாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும், விமலன் (கனடா), விஜிதா (கலாசார உத்தியோகத்தர், பிரதேச செயலகம்-நல்லூர்), விக்ரமன் (கனடா), நர்மதா (இலண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருந்ததி (கனடா), செல்வகுமார் (ஆசிரியர், யா/ஒஸ்மானியாக் கல்லூரி), மதிவதனி (கனடா), பவானந்தன் (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தருமலிங்கம், குமாரவேலு, காலஞ்சென்ற சச்சிதானந்தன், மாங்கையற்கரசி, சண்முகநாதன் (கனடா), தயானந்தராஜா (ஓய்வுநிலை அதிபர்), திருநாவுக்கரசு (இலண்டன்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் மலர், கனகேஸ்வரி, அன்னபூரணி, லிங்கநாயகம், ஆனந்தி (கனடா), சத்தியதேவி, புவனேஸ்வரி (இலண்டன்) ஆகியோரின் மைத்துனரும் வித்தகன், சாமந்தி, மிதுனன், பிருந்தன், அபிராம், விஷானா, விஹாசா, அர்வின், ஹர்சன், சிந்தனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.09.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் முரசுமோட்டை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முரசுமோட்டை ஐயன்கோவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

300/, முரசுமோட்டை,
பரந்தன்.

தகவல் : குடும்பத்தினர்.
077 444 5324
076 603 4900

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்...

நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பிரபாத் தெரிவித்தார்.
இந்தச் சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த கார், வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிர்த் திசையில் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது.
இதன்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.
அருள் கோடீஸ்வரன் (வயது - 45), கிஷாகினி (வயது - 40), அவர்களது மகன் ஹரிதிஷன் (வயது - 8) ஆகிய மூவரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.
காரின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
(அ-ஓ-23-26)



## ஐ.எம்.எப்...

படிக்கை எட்டப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார். இது இலங்கைக்கு ஒரு முக்கியமான முன்னெடுப்பு என்று அவர் கூறியுள்ளார்.
தனது ருவிற்றரில் இது தொடர்பில் அவர் பதிவிட்டுள்ளார். (அ-ஓ-இ)

## படிப்பது...

சிங்கவுடன் கலப்புப் பொறிமுறை தொடர்பில் பேச்சு நடத்தியுள்ளனர். இந்தப் பேச்சு தற்போதைய சூழலில் பொருத்தமற்ற - தமிழர் தரப்புக்கு பின்னடைவான - ஒன்று - இவ்வாறு ரெலோவிலிருந்து பிரிந்து சென்று உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந. ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.
இணைய ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.
எதிர்வரும் 12ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பிக்கிறது. முதல் நாளிலேயே இலங்கை தொடர்பான தீர்மானம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை வாக்களித்து, இதுவரை நிறைவேற்றாத விடயங்கள், போர்க்குற்றங்கள் தொடர்பானதே இந்தத் தீர்மானம்.
தமிழர் தரப்பு இந்த முறை பரந்துபட்ட அடிப்படையில் போரின் இறுதிக்கட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தை பாதுகாப்புச் சபைக்கு அனுப்பி வைக்குமாறு மனித உரிமைகள் பேரவையை வேண்டியுள்ளன. இந்த வேண்டுகோளில் ரெலோ, நான் சார்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் உட்பட 6 தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதப்பெரியவர்கள், மனித உரிமைகள் அமைப்புக்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் அமைப்புக்களும் கையெழுத்திட்டுள்ளன.
இந்தமுறை ஜெனிவாவில் எப்படி தப்பிப்பது பற்றித்தான் அரசு தீவிரமாகச் சிந்தித்து வருகிறது. இந்தச் சூழலில் தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகள் பற்றி ஜனாதிபதியுடன் பேசுவது தவறில்லை. ஆனால், பேசிய காலகட்டம் உகந்ததல்ல.
ஜனாதிபதி எதையும் செய்யவில்லை. ரெலோவுக்கு சில வாக்குறுதிகளைக் கொடுத்துள்ளார். இது அவருக்கு நல்ல வாய்ப்பை கொடுத்துள்ளது. 'தமிழர் தரப்புடன் பேசிக் கொண்டிருக்கிறேன், அவர்கள் சில கருத்துக்களை முன்வைத்துள்ளார்கள், அதனடிப்படையில் செயற்படத் தயாராக இருக்கிறேன், அவர்களிடமும் சொல்லியுள்ளேன்' என ஐ.நா.வில் இலங்கை விவகாரத்தில் ஆர்வமுள்ள இராஜதந்திரிகளிடம், ரணில் இதனை ஒரு ஆயுதமாகப் பாவிப்பார்.
அரசாங்கம் நீண்டகாலமாகத் தட்டிக்கழித்து வந்துள்ள படைக்குறைப்பு, அரசியல்கைதிகள் விவகாரங்களை இவ்வளவு அவசரமாக, இந்தச் சூழலில் பேச வேண்டிய அவசரத்தின் காரணம் எங்களுக்கு விளங்கவில்லை.
போர்க்குற்றங்களுக்கு அடிப்படையான வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில், கலப்புபொறிமுறை பற்றி ரெலோவினர் முன்வைத்துள்ளதே முக்கியமான விவகாரம். ஐ.நா. கூட்டத்தொடரின் பின்னர் நீதியமைச்சருடன் பேசி அதற்கான குழுவை அமைத்து, தமிழர் தரப்புடனும்பேசி ஆவன செய்வதாகக் கூறியதாக ரெலோவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
போர்க்குற்ற விசாரணை தொடர்பில் பாதுகாப்புச் சபைக்கு அனுப்பி வையுங்கள் என கேட்டுக் கொண்டபின்னர், இலங்கை அரசாங்கத்துடன் அது பற்றி பேச எதுவும் இருக்கமுடியாது. காரணம், குற்றமிழைத்தவர்கள் எனக் கூறப்படும் இலங்கை அரசாங்கத்தை எதிரிக் கூண்டில் நிறுத்தி, சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தும் கோரிக்கை அது. ஆயினும், ரெலோ இந்த விடயத்திலே அதிலிருந்து தவறியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில், அந்தக் கோரிக்கையைஜனாதிபதியிடம்முன்வைத்திருக்கக்கூடாது. இது ஒரு இராஜதந்திரச் சறுக்கல். ஏன் அவர்கள் அப்படி செய்தார்கள் என எனக்குத் தெரியவில்லை - என்றார். (அ-ஓ-இ)

## புதிய...

உருவாக்கியுள்ளோம். அழுத்தக் குழுவாக நாம் செயற்படுவோம். பிரச்சினைகளைப் பற்றி பேசுவதில் பயன் இல்லை, தீர்வுகளைப் பற்றி கதைக்கவே இந்தக் கூட்டணி. இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.
'மேலவை இலங்கை கூட்டணி'யின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர், சர்க்கரைப் பழக்கத்தை கைவிடாமல், அதனைத் தொடர்ச்சியாக சாப்பிட்டால் என்ன நடக்கும்? அதுபோலவே கடன் பொறிக்குள் இருந்து மீள்வதற்காக மீண்டும் மீண்டும் கடன் வாங்கும் நடவடிக்கையையே ஆட்சியாளர்கள் முன்னெடுத்துவருகின்றனர்.
எமது நாடு பற்றி எரிந்து கொண்டிருக்கின்றது. அந்தத் தீயை அணைக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. எனவே, புதிய அரசியல் கூட்டணியில் இணையுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் - என்றார்.
(அ-ஓ-44)

## குடும்ப...

கூட்டணி' உதயமாகியுள்ளது - இவ்வாறு 'மேலவை இலங்கை கூட்டணி' மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கை என்ப[illegible] அல்லது பண்டாரநாயக்களுக்கோ எழுதி வைக்கப்பட்ட சொத்து அல்ல. அது மக்களுக்கானது. ஆட்சியும் மக்களுக்குரியதாகவே இருக்க வேண்டும். ஆனால், கடந்த காலங்களில் மக்கள் ஆணைக்கு புறம்பாக நடவடிக்கைகள் இடம்பெற்றன. அமைச்சரவையில் இருந்து நாம் சுட்டிக்காட்டினோம். அதன் பலனாக வெளியேற்றப்பட்டோம்.
வாக்குகள் பெற்று ஆட்சிபீடம் ஏறும்வரைதான் பங்காளிக்கட்சிகள் வேண்டும். இந்த அரசியல் கலாசாரத்துக்கு முடிவு கட்டவேண்டும். எமது கூட்டணியில் பெரிய கட்சி, சிறிய கட்சி இணைந்தால் கூட சம அந்தஸ்தே வழங்கப்படும்.
பாரம்பரியக் கூட்டணிக் கலாசாரத்துக்கு முடிவு கட்ட வேண்டும். நாட்டுக்காக, மக்களுக்காக புதியதொரு கூட்டணி அரசியல் கலாசாரத்தை நாம் உருவாக்கியுள்ளோம். இதில் உள்ள தலைவர்கள், மதிநுட்பத்துடன் செயற்படக்கூடியவர்கள். அதேவேளை, ஐரோப்பாவிடமிருந்த பலம் ஆசியா பக்கம் சாய்கின்றது. எனவே, தேசியரீதியில் மட்டுமல்ல ஆசிய சக்திகளுடன் நிற்கும் வகையிலும் எமது நடவடிக்கை அமையும் - என்றார் விமல். (அ-ஓ-44)

## கோத்தா...

அல்லது வெளிநாட்டில் தங்குமாறோ எவரும் கோரவில்லை.
அவருக்கென சொந்த நாடு இருக்கும் போது அவர் ஏன் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்? எமது கோரிக்கையின் பிரகாரம் அவர் நாடு திரும்பியுள்ளார்.
அவருக்கு முன்னாள் ஜனாதிபதிக்குரிய அனைத்துச் சலுகைகளையும் எமது அரசாங்கம் வழங்குகின்றது. அவர் இந்நாட்டில் சுதந்திரமாக நடமாட முடியும். போதிய பாதுகாப்பு வசதிகளையும் அவருக்கு அரசு வழங்கும்.
மீண்டும் அரசியலுக்கு வர அவர் இணக்கம் தெரிவித்தால் அவரை முதலில் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினராக்குவோம்.
மக்களின் அமோக ஆணை பெற்று ஜனாதிபதியாகப் பதவி வகித்த கோத்தாபய ராஜபக்சவை அரசாங்கம் என்ற ரீதியில் நாம் ஒருபோதும் கைவிடமாட்டோம் - என்றார். (அ-ஓ-22)

## கொத்துரொட்டி...

பட்டுள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தது. கோதுமை மாவின் விலை அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு காரணமாக விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.
(அ-ஓ-இ)

## கூட்டமைப்பிலிருந்து...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடான கலந்துரையாடல் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
தற்போதைய பொருளாதார இக்கட்டு நிலையில் மக்களுக்கான உதவிகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே கூட்டம் கூட்டப்பட்டது.
கட்சித் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் பங்கேற்றார்.
இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்,
எதிர்வரும் தேர்தல்களில் தமிழ் அரசுக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டும். அடுத்தடுத்த தேர்தல்களில் ரெலோ, புளொட் போன்ற பங்காளிக்கட்சிகளுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டால், அங்கு சுயேச்சை வேட்பாளர்களை களமிறக்கி அவர்களை நாம் தோற்கடிக்கவேண்டும். கிளிநொச்சியில் நான் அப்படி சுயேச்சை வேட்பாளர்களைக் களமிறக்கினேன். அதனால் 3 சபைகளைக் கட்டுப்படுத்துகிறேன். கிளிநொச்சியில் எவ்வளவு கட்டுப்பாடாககட்சியைவைத்துள்ளேன். அதே போல ஏனைய இடங்களிலும் கட்சியைக் கட்டுப்பாடாக வைத்திருக்கவேண்டும்.
அரசியல் படிப்பதென்றால் கள்ளுத்தவறணைக்கு செல்ல வேண்டும். பிரதேச சபை உறுப்பினர்கள் ஊரில் நடக்கும் மங்கல, அமங்கல நிகழ்வுகளுக்குச் செல்லவேண்டும்.
ரெலோ தனித்துச் சென்று ஜனாதிபதியைச் சந்தித்துள்ளது. 'ஜனாதிபதிக்கு எம்மில் சிலர் வாக்களித்ததாக சொல்லப்படுகிறது. அதை அவர்களே வெளிப்படுத்துகிறார்கள். என்றாலும், அவர்கள் தனித்துச் சென்று சந்திப்பதை நாம் பிழை சொல்ல முடியாமல் உள்ளோம். ஏனெனில், சுமந்திரனும் அப்படித்தான் நடக்கிறார். எமது கட்சிக்காரரை கட்டுப்படுத்த முடியாத நாம், மற்றக்கட்சிகளை எப்படி கேள்வி கேட்பது? - என்றார்.
(அ-ஓ-இ)

## தகுதியானவர்கள்...

சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு வடக்கு மாகாணத்தில் தகுதியானவர்கள் இருக்கும் நிலையில் வெளிமாகாணங்களில் இருந்து நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அந்தக்கடிதத்தில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
தகுதியான சுகாதாரப் பணிப்பாளர் ஒருவரை வடக்கில் இருந்தே தெரிவு செய்யுமாறு அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதுடன் வழங்கப்பட்ட நியமனத்தை மீள் பரிசீலனை செய்யுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-ஓ-20)

## 2 மாத...

றதீபன் தஸ்விக் என்ற குழந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் குறித்த குழந்தை சேர்க்கப்பட்டு, கடந்த 3ஆம் திகதி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போதே குழந்தை உயிரிழந்துள்ளது. இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக குழந்தையின் உடல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.
(அ-ஓ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனின் உயிரை பறித்தது செல்பி

கொழும்பு, செப்.5

பதுளை ஹல்துமுல்ல, உடவெரிய பிரதேசத்தில் நீர்வீழ்ச்சிக்கு அருகில் சென்று 'செல்பி' எடுக்க முயன்ற இளைஞர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ஹல்துமுல்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடவெரிய சன்வெளி பிரதேசத்தில் உள்ள நீர்வீழ்ச்சியைப் பார்வையிடுவதற்காக வந்திருந்த இரு இளைஞர்களில் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வெலமிடியாவ பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயது இளைஞர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஹல்துமுல்ல பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து நேற்றுமுன்தினம் நீர்வீழ்ச்சிக்கு அருகில் சுமார் 200 அடி பள்ளத்திலிருந்து இளைஞனின் சடலத்தை மீட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் ஹல்துமுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

# எரிபொருள் நிலையத்தில் நேற்றுமாலை கைகலப்பு

## மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டது

முல்லைத்தீவு, செப். 5

முல்லைத்தீவு, விசுவமடு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று மாலை இடம்பெற்ற கைகலப்பையடுத்து மறு அறிவித்தல் வரையில் அது மூடப்பட்டுள்ளது.

செல்லுபடியற்ற 'கியூஆர்' குறியீடு மூலம் எரிபொருள் நிரப்புவதற்கு ஒருவர் முயற்சித்துள்ளார். அவருக்கு எரிபொருள் வழங்க முகாமையாளர் மறுத்துள்ளார். இதனையடுத்து சம்பந்தப்பட்ட நபர் வேறு நபர்களுடன் இணைந்து முகாமையாளரைத் தாக்குவதற்கு உள்நுழைந்த போது எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். அந்தக் குழுவினரும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். முகாமையாளர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நடைபெறும்போது, எரிபொருள் நிரப்பு நிலையக் கடமையில் புதுக்குடியிருப்பு பொலிஸார் நின்றுள்ளனர். அவர்கள் முன்பாகவே இந்தச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் நடத்தியவர்கள் கைது செய்யப்படும் வரையில் எரிபொருள் நிரப்பு நிலையம் திறக்கப்படாது என்று முகாமையாளர் தெரிவித்துள்ளார். (அ-ஓ-113)

## தலைமைத்துவ பயிற்சி வழங்கும் பெரமுன!

கொழும்பு, செப். 5

எதிர்கால அரசியல் தலைவர்களை உருவாக்கும் அரசியல் தலைமைத்துவ பயிற்சி மையமொன்றை பொதுஜன பெரமுன கட்சி ஆரம்பித்துள்ளது.

மையத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நடைபெற்றுள்ளது.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல்களுக்காக பிரதேச மட்டத்தில் திறமையான அரசியல்வாதிகளை உருவாக்குவது இந்தப் பயிற்சி மையத்தின் நோக்கமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, செப். 5

காலி - பிட்டிகல பகுதியில் நேற்றுமுன்தினம் நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பிட்டிகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தல்கஸ்வ பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவர் மீது, அந்தப் பகுதியில் மறைந்திருந்த ஒருவர் இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் காயமடைந்த மீயாகம, தல்கஸ்வ பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய நபர், கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் பணத்தகராறு என்றும், சந்தேகநபர் தப்பிச்சென்றுள்ளார் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-இ)


# வேலைவாய்ப்பு

வடமாகாணத்தில் இயங்கும்
முன்னணி பத்திரிகை நிறுவனத்திற்கு
வடமராட்சி கிளையில் (நெல்லியடி)
மாலை 5.00 மணிமுதல் இரவு 11.00 மணிவரை
கடமையற்ற பணியாளர்கள் தேவை.

**தகைமைகள்**

- க.பொ.த. உயர்தரம் சித்தி
- கணினி அறிவு மற்றும் தொடர்பாடல் திறன்
- சுயவிபரக்கோவையுடன் இன்று (05.09.2022) திங்கட்கிழமை காலை : 09.00 - 1.00 மணிவரையும் மற்றும் மாலை : 4.00 - 7.00 மணிவரையும் நேரில் வரவும்.

உதயன் வடமராட்சி, பிரதேச காரியாலயம், மாலு சந்தி அல்வாய். (ce37968) (2.6).

## கார்கள் குத்தகைக்கு தேவை

தனியார் நிறுவனத்திற்கு கார்கள் மாதாந்த வாடகைக்கு சாரதி இல்லாமல் தேவை.

077 839 5849

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 141 பரப்புக் காணி (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலை யில்.
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 1/2 KM தூரத்தில்
- சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 1/2 KM தூரம்
- புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காப்பெற் வீதியில் இருந்து இரண்டாவது காணி .
- 775 இலக்க வழி பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.
  விவசாயம் செய்வதற்கும். வீடுகள் அமைப்பதற்கும் உகந்த இடம்.
- ஒரு பரப்பின் (1 நிலபரப்பு) விலை 1½ லட்சம் (150.000) மட்டும்.
  20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 077 6585 999, 076 4365 814, 077 8748 135

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 33 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

- நான்கு பரப்பாகவும். இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேரூந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபர்ப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 076 755 8606, 077 911 6983


# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 02 - 02 - 1941 |  | 04 - 09 - 2022 |

## திருமதி சொர்ணலட்சுமி தர்மச்சந்திரன்

அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் பலாங்கொடை, கிளிநொச்சி, ஊரெழு மற்றும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணலட்சுமி தர்மச்சந்திரன் நேற்று (04.09.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நற்குணர் கந்தையா அன்னைமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் ராணிநாயகம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தர்மச்சந்திரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், தனலட்சுமி மற்றும் கமலாலட்சுமி, காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இலிங்கநாயகம் (UK), காலஞ்சென்ற தர்மதுரை, தர்மகுணலோசனா, தர்மசேகரம் (அவுஸ்திரேலியா), தர்மகுணபூசணா, தர்மஜெயசூரியர், காலஞ்சென்றவர்களான தர்மகுணவதனா, தர்மகுணபவானி, கமலாம்பிகை, அருணாசலம், அருளானந்தம் மற்றும் கணேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.09.2022) திங்கட்கிழமை அஞ்சலிக்காக கோம்பயன் மணல் இன்பம் மலர்சாலையில் காலை 8.30 மணியில் இருந்து பிற்பகல் 1.00 மணிவரை வைக்கப்பட்டு தொடர்ந்து இறுதிக்கிரியைகள் நடைபெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அருளகம்"
நீர்வேலி வடக்கு
நீர்வேலி

தகவல் :
077 608 6140 - அ.இலக்ஸ்மன்
077 7111 728 - அ.இறஞ்ஜிற்
(பெறாமக்கள்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.